**தலைப்பு 151 – கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 151 – கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அபிவிருத்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 நவம்பர் 10 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 4,439.49 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 4,334.18 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 105.31 மில்லியன் அதாவது 2.37 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டுவருவன | 1,417.66 | 1,391.42 | 26.24 | 1.85 |
| மூலதனம் | 3,021.83 | 2,942.76 | 79.07 | 2.62 |
| மொத்தம் | **4,439.49** | **4,334.18** | **105.31** | **2.37** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 15101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 8.00 | 7.99 | 3.80 | 5.11 | 30.00 | 21.34 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழ் காணப்படும் காணப்பட்ட இலக்கம் 7002/0000/00/0089/0016/000 கொண்ட கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 34.57 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழ் காணப்படும் 05 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 145.62 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா. மில்லியன்** |
| 6000/0000/00/0002/0071/000 | 0.02 |
| 6000/0000/00/0013/0040/000 | 14.73 |
| 6000/0000/00/0001/0050/000 | 5.05 |
| 6000/0000/00/0016/0021/000 | 125.81 |
| 6000/0000/00/0018/0045/000 | 0.01 |
| மொத்தம் | 145.62 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அபிவிருத்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 நவம்பர் 19 அந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (உ) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ஊ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (எ) | அடியிதழ் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |
| (ஏ) | விலைகூறல் அழைப்பும் பதிவேடு | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.2.1 |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சமர்பிக்கப்பட்டிருந்த 09 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2017 மார்ச் 31 திகதி வரையும் பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,448.04 மில்லியன் தொகையாக இருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சினால் 2017 ஏப்ரல் 30 திகதி வரை தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 9,687,429 தொகையாக இருந்தது. இந்த மீதி 2015 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் மீதியாகும்.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் உரிமை கோறக் கூடிய காலத்தை மிகைத்திருந்த அனைத்து வைப்புக்கள் தொடர்பாக ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 மற்றும் 2015 மார்ச் 25 திகதி மூன்றாம் தரப்பினருக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 10,516,070 தொகை உரிய தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யாமல் தற்காலிமாக தடுத்து வைக்கப்படும் வைப்புக் கணக்கு ஒன்றில் வைப்புச் செய்யபட்டிருந்தது.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்கான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விடய இலக்கம் 15101 கொண்ட அரசாங்க உத்தியோத்தருக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதி ரூபா 948,577 ஆக காணப்பட்டதுடன் அக்கடன் மீதி 05 வருடங்கள் முதல் 31 வருடங்கள் வரையான காலம் முதல் காணப்பட்டு இருந்த போதிலும் அவற்றை அறவீடு செய்வதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அமைச்சினால் உத்தியோகத்தர்களுக்கு கடன்கள் வழங்கும் போது கடைபிடிக்க வேண்டிய தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 10.3 பிரிவிற்கு திருத்தமாக வழங்கப்பட்டுள்ள 2008 திசெம்பர் 31 திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 302,850 இற்கான கடன் வழங்கப்பட்டிருந்தது.

**3.6 உள்ளகக் கணக்காய்வு**

**வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

2002 செப்டம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ் அறிக்கை 2017 நவம்பர் 10 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பெறுமதியினை இனங்கண்டிருக்காத 10 வாகனங்கள் சுமார் 3 வருட காலம் முதல் வினைவற்று காணப்பட்டிருந்தது.

**(ஆ) வருடாந்த பண்டக் கணிப்பீடு**

2016 திசெம்பர் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 மே 09 திகதி வரையும் அமைச்சின் பண்டக் கணிப்பீட்டுச் சபை அறிக்கை கணக்காளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. 2017 செப்தெம்பர் 08 திகதி வரை ஒவ்வொரு பிரிவுகளின் கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் சமர்த்திருந்த போதிலும் மிகைகள், பற்றாக்குறை மற்றும் பயன்படுத்த முடியாத பண்டங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**3.8 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 33.24 மில்லியன் காணப்பட்டது.

**3.9 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

2008 ஜூன் 26 திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி மற்றும் 02 ஆம் பந்தியின் பிரகாரம் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள எரிபொருள் வரையறையை மிகைத்து ரூபா 299,941 தொகை மேலதிகமாக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

**3.10 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்**

சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட 07 மாவட்டங்களில் அபிவிருத்தி விவகாரங்களை நிறைவேற்றுவதற்காக எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டுதவி செயற்திட்டமொன்று 10 ஆக்கக் கூறுகளின் கீழ் அமுல் நடத்தப்பட்டிருந்ததுடன், அவற்றில் மூன்று ஆக்கக் கூறுகளின் மூலம் நுண் தொழில் அபிவிருத்தி மற்றும் நிதிச் சேவைகள் வழங்கும் செயற்திட்டமொன்று அமுல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த நுண்தொழில் அபிவிருத்தி மற்றும் நிதிச்சேவை வழங்கும் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய கடன் உடன்படிக்கையின் அட்டவணை 03/10(09) ஆம் பிரிவின் பிரகாரம் சேவை வழங்கும் நிறுவனத்தினை தெரிவு செய்யும் போது அரச பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையின் பிரகாரம் செயற்படாமல் 2013 மார்ச் 26 திகதி தனியார் நிறுவனம் ஒன்றினை சேவை வழங்கும் நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான தொழில்நுட்ப மதிப்பாய்வு 2013 மார்ச் 27 திகதி மேற்கொள்ளப்பட்டு பெறுகைகளை போதியளவு மதிப்பாய்வு செய்யாமல் 2013 மார்ச் 28 திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு ரூபா 4,661,000 இற்காக காரியம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாக அவதானிப்பட்டது.

(ஆ) குறிப்பிட்ட சேவை வழங்கும் நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவராக கடமையாற்றும் செயற்திட்டத்தின் நுண் தொழில் கிராமிய அபிவிருத்தி முகாமையாளர் மேற்கூறிய தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் தலைவராகவும் கடமையாற்றப்பட்டிருந்ததுடன் தேசிய நீரியல் வள வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிருவாகப் பணிப்பாளர்(செயற்திட்டம்) என செயற்படும் இணையும் சேவை வழங்கும் நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவராக பணியாற்றியுள்ளார். அதேபோல், நுண் அபிவிருத்தி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கான சேவைக்காக ரூபா 4,661,000 தொகையும் நுண்நிதி செயற்திட்டம் தொடர்பாக 05 மாவட்டங்களில் ஆலோசனைசார் விவகாரங்கள் மேற்கொண்டு செயற்திட்டத்தை தயாரிப்பதற்காக ரூபா 64,323,300 தொகை தொடர்பாக கொடுப்பனவு உறுதிச்சான்று அங்கீகரித்தல் நுண்தொழில் கிராமிய அபிவிருத்தி முகாமையாளரினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட கம்பனியுடன் காணப்படும் தொடர்பினை வெளிப்படுத்தியிருக்காமை 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 191, 192 மற்றும் 193 பிரிவுகளுக்கு முரணாக செயற்படுதலாகும்.

(இ) ஆலோசனை நிறுவனத்தின் விதப்புரையின் மீது சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட 07 மாவட்டங்களில் நுண் வியாபாரிகளின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் குறிக்கோளுடன் இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன்

மாவட்டக் கூட்டுறவு சங்க அங்கத்தவர்கள்(2250) களின் முதலீட்டின் மீது பொது கம்பனி ஒன்று நிறுவுவதற்கு திட்டமிட்டிருந்தது. உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 07 விற்பனை நிலையங்களை பயன்படுத்துவதற்கு வசதி ஏற்படுத்தி அதன் மூலம் அனைத்து அங்கத்தவர்களுக்கும் நலன்கள் உரித்தாக்கும் விதமாக பொதுக் கம்பனி நிறுவப்பட்டிருந்தது. எனினும் 07 பங்குதாரர்களுக்கு மாத்திரமே கம்பனியின் நலன்கள் உரித்தாகும் விதமாக 35 பங்குகல் அடங்கும் விதமாக பொதுக் கம்பனி நிறுவப்பட்டிருந்தது.

இந்த கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) நுண் தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் வெற்றிகரத் தன்மை தொடர்பாக அறிக்கை ஒன்று தயாரிப்பதற்காக நபர் ஒருவருக்கு ரூபா 1,080,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்களின் பிரகாரம் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிக்கையொன்றாகக் காணப்படவில்லை.

(ii) பொதுக் கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்வதற்காக 1276 அங்கத்தவர்களிடம் ரூபா 1,000 வீதம் ரூபா 1,276,000 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. இந்த பணத்தை சேகரித்தல் தவிர வேறு ஏதும் வர்த்தக நடவடிக்கைகள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் பணம் செலுத்திய நபர்களுக்கு கம்பனியில் உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு கம்பனியின் வங்கிக் கணக்கின் மீதி ரூபா 1,257,000 தொகையாகும். அதன் பிரகாரம் சேகரிக்கப்பட்ட பணத்தில் ரூபா 19,000 தொகை வங்கியில் இடப்பட்டிருக்கவில்லை.

(iv) வரையறுக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட கூட்டுறவு சங்கத்தினால் மூன்று அங்கத்தவர்களுக்கு விற்பனை நிலையங்களுக்காக 3 கடைகள் வழங்கியிருந்த போதிலும் அந்த சாட்டுதல் தொடர்பான கோவைகள் ஏதும் கூட்டுறவு சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டி ருக்கவில்லை. கடைகளை பெற்றிருந்த நபர்கள் அவற்றை வேறு தரப்பினருக்கு வாடகைக்கு கொடுத்து வருமானம் பெற்று வருவதுடன் உரிமையினை உறுதிப்படுத்துவற்காக கூட்டுறவு சங்கத்திடம் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை. அதன் பிரகாரம் மேற்கூறிய செயற்திட்டதின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(v) காலி மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த 3 விற்பனை நிலையங்கள் மூன்று அங்கத்தவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டிருந்தது. அனைத்து அங்கத்தவர்களினதும் உற்பத்திப் பொருட்களை இந்த விற்பனை நிலையத்தின் மூலம் விற்பனை செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும் அக் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(vi) மாத்தறை மாவட்ட கூட்டுறவு சங்கமொன்றிற்கு சொந்தமான விற்பனை நிலையங்களில் வெளி நபர்களின் பாதிப்புக்களினால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என அறிவித்திருந்த போதிலும் அமைச்சினால் இது தொடர்பாக எதுவித நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் மூலம் அமுல் நடத்தியிருந்த கருமங்களைத் தொடர்ந்து முன் கொண்டு செல்வதற்காக அவற்றை தொடர் செயல் நடவடிக்கைகள் எடுப்பதற்கும்

தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பனத்திற்கும் அமைச்சுக்கு பொறுப்பு சாட்டிருந்த செயற்திட்டத்திட்டத்திற்கு சொந்தமான சொத்துக்கள், கோவைகள் மற்றும் ஆவணங்கள் அமைச்சுக்கு சாட்டப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்டிருந்த கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் முடிவடைந்து 10 வருடங்கள் வரை உரிய ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டுமெனினும் ஆவணங்களை பாதுகாப்பதற்காக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்காததுடன். கணக்காய்விற்கு கேட்டிருந்த ஆவணங்கள் எதனையும் வழங்குவதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) செயற்திட்டத்தின் இறுதியில் இந்த நுண் செயற்திட்ட அபிவிருத்தி செயற்திட்டதின் கீழ் தனியார் கம்பனியை தொடர்ந்து நடாத்திச் செல்வதாக அமைச்சுக்கு சாட்டியிருந்ததுடன் செயற்திட்டம் தொடர்பான முறையான மேற்பார்வையொன்று நடைபெற்றிருக்கவில்லை. நுண் தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் ஏழு மாவட்ட மீனவக் கூட்டுறவு சங்கங்களின் கோவைகள் காணாமல் போயிருந்தன.

(உ) அதன் பிரகாரம், செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளான நுண் தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஏற்படுத்துதல் பலனற்றதாக ஆகியுள்ளதெனவும், தனியார் கம்பனி செயற்படாது காணப்பட்டது எனவும், பங்குகளை முதலீடு செய்வதற்கு ஒட்டுமொத்த சங்க அங்கத்தவர்களுக்கு இதன் கீழ் சலுகை ஏதும் கிடைத்திருக்கவில்லை எனவும், அமைச்சு மட்டத்தில் இந்த தொழில் கூட்டிணைப்பு ஒன்று மேற்கொள்ளப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது.

(ஊ) நுண் தொழில் அபிவிருத்தி விடயத்திற்காக சுனாமிக்கு பின்னரான புனர்நிர்மாணம் மற்றும் வள முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒட்டுமொத்த கிரயம் ரூபா 374,817,606 ஆகக் காணப்பட்டது. IFAD அமைப்பில் இருந்து 2 கடன் உடன்படிக்கைகளின் கீழ் பெற்றிருந்த 31.09 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி 2015 அக்தோபர் 15 திகதி முதல் 2045 ஏப்ரல் 15 வரை அரையாண்டிற்கான 0.75 சதவீத வட்டியுடன் திறைசேரியினால் வருடாந்தம் செலுத்த நேரிட்டிருந்தது. அதன் காரணமாக எதிர்பார்த்த கருமம் தோல்வியடைந்திருந்த காரணத்தினால் இந்த கடன் உதவி பயனற்ற செலவு ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 3.11 செயலாற்றுகை

2016 ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### போதியளவானதாக மேற்கொள்ளப்படாத பிரதான கருமங்கள்

(அ) கரையோர புனர்நிர்மாண மற்றும் மூலவள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் (கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள்)

(i) கடலேரி அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான 2016 ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன் ஏற்பாடுகளில் கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த ரூபா 16,100,000 தொகை தேசிய நீர் வாழ் வளங்கள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் கீழ் ரூபா 15,970,110 இற்கான செலவில் புத்தளம் மாவட்டத்தில் பம்பல மீன் இனப்பெருக்க நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதனது ஒப்பந்த வேலை பெறுமதி ரூபா 15,001,050 தொகையாகும். அதன் பிரகாரம் ரூபா 969,060 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.4.4(1) இன் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணங்கள் கொடுப்பனவுக்கான பாதுகாப்புமுறி சமர்பித்தலின மூலம் ஒப்பந்த தொகையில் 20 சதவீதம் உச்ச அளவு முற்பணமாக செலுத்த முடியுமெனினும் அதற்கு முரணாக மேற்கூறிய செயற்திட்டத்தை அமுல்நடத்தும் போது மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 7,371,395 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 5.4.4(11) இன் பிரகாரம் கொடுப்பனவுகளில் 90 சதவீதம் செலுத்துவதற்கு முன்னர் முற்பணம் அனைத்தும் தீர்க்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செயற்படாமல் மொத்த தொகையும் செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(iii) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.12.2 இன் பிரகாரம் வேலையை பூர்த்தி செய்யப்பட்டதற்கான சான்றிதழ் ஒன்று செயற்திட்டப் பொறியியலாளரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2017 ஜூலை 31 திகதி வரை செயலாற்றுகை தொடர்பான அவ் அறிக்கை சமர்பித்திருக்கவில்லை.

(iv) கரையோர புனர்நிர்மாணம் மற்றும் மூலவள முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் நீரியல் வள திணைக்களத்திற்கு வழங்கியிருந்த ஏற்பாடுகளை குறிப்பிட்ட விடயத்திற்கு தொடர்பில்லாத ஏனைய கருமங்களுக்காக ரூபா 2,959,789 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(v) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு ரூபா 1,695,000 இற்கான ஏற்பாடுகள் வழங்கியிருந்ததுடன் திறைசேரி அச்சு குறிப்பின் பிரகாரம் மேற்கொண்டிருந்த செலவுகள் ரூபா 5,002,395 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம், ரூபா 3,907,395 தொகை ஏற்பாடுகளை மிகைத்து செலவிடப்பட்டிருந்தது.

(vi) மேற்கூறிய செயற்திட்டம் மாத்தறை மாவட்ட செயலாளருக்கு ரூபா 375,000 ஏற்பாடு ஒன்று வழங்கியிருந்ததுடன் ரூபா 255,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருமங்கள் அறிவிக்கப்பட்டிருக்காததுடன் தொடர் செயல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நன்னீர் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக நன்னீர் நீர்த்தேக்கங்களில் இலவசமாக மீன் குஞ்சுகளை வைப்புச் செய்தல்.

(i) இந்த செயற்திட்டத்திற்கான தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபைக்கு ரூபா 30 மில்லியன் வழங்கியிருந்த போதிலும் கொடுப்பனவு தொடர்புடைய விபரங்கள் அல்லது கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் ஏதும் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ii) நன்னீர் மீன் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கான நன்னீர் நீர் தேக்கங்களில் மீன் குஞ்சுகளை வைப்புச் செய்வதற்காக தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபைக்கு வழங்கியிருந்த ரூபா 30 மில்லியன் ஏற்பாடுகளை செலவீடு செய்தல் தொடர்பாக அமைச்சு தொடர் செயல் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(iii) 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை மேற்கூறிய விடயத்திற்காக ரூபா 140 மில்லியனுக்காக ஏற்பாடு ஒன்று வழங்கியிருந்ததுடன் ரூபா 123.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், மேற்கொள்ளப்பட்டிருந்த செலவிற்கு ஏற்ற வகையில் உற்பத்திகளில் அதிகரித்தல் நடைபெற்றிருக்கவில்லை என அந்த 5 வருடங்களின் உற்பத்தி தரவுகளின் பிரகாரம் தெளிவாவதுடன் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை

நன்னீர் மீன் உற்பத்தி 4980 மெட்ரிக் தொகைகளுக்கான வளர்ச்சி ஒன்று மாத்திரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) அமைச்சினால் வழங்கப்படும் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபை மற்றும் ஏனைய அமைப்புக்களின் மூலமும் நன்னீர் மீன் குஞ்சு இனப் பெருக்கத்திற்காக நேரடி செலவுகள் மேற்கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2014 ஆண்டு முதல் இவ் விடயத்திற்காக வருடாந்தம் இடையறாமல் ரூபா 30 மில்லியன் வீதம் மதிப்பீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு மொத்த ஏற்பாடுகளும் செலவிடப்பட்டடிருந்தது.

**(இ) கடற் தொழில் சமூகத்தை பலத்தும் நிகழ்ச்சித் திட்டம்**

(i) கடற் தொழில் சமூகத்தை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 91,847,432 இற்கான ஏற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 74,323,303 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதனது பௌதீக முன்னேற்றம் தொடர்பாக அமைச்சினால் தொடர் செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு வழங்கியிருந் ரூபா 5,427,492 இற்கான ஏற்பாடுகளின் மூலம் நிறைவேற்றிய கருமங்கள் தொடர்பான விபரங்கள் ஏதும் 2017 ஆகஸ்ட் 11 திகதி வரையும் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(iii) மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் விடயங்களுக்காக கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த ரூபா 4,385,700 ஏற்பாடுகளில் ரூபா 1,916,043 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,469,657 தொகை எனப்படும் ஏற்பாடுகளில் 54 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(iv) கடற்தொழிலாளர்களுக்கு விநியோகிப்பதற்காக ரூபா 44,945,861 இற்கான நன்னீர் மீன்பிடி உள்ளீடுகள் கொள்வனவு செய்வதற்காக 2016 ஆண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அப் பண்டங்களை கடற்தொழிலாளர்களுக்கு விநியோகிகப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) தங்காலை கடற்தொழில் வட்டாரத்தில் சிங்க இறால் பிடிக்கும் செயற்திட்டத்தின் கீழ் கடற்தொழிலாளர்களுக்காக விநியோகிப்பதற்காக 990 வலைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,270,549 இற்கான ஏற்பாடுகளை சிறைச்சாரலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு செயலாளருக்கு வழங்கியிருந்த போதிலும், அந்த வலைஉபகரணங்களை மீனவர்களுக்கு விநியோகிப்பதற் கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், அதனது முன்னேற்றம் தொடர்பாகவும் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(vi) உப்புத்தன்மை குறைவான கருவாடுகளை உற்பத்தி செய்வதற்காக தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை கரு ரூபா 213,575 இற்கான தொகை ஒன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான ஆய்வு அறிக்கையொன்றை சமர்பித்திருக்காததுடன் உப்பு தன்மை குறைவான கருவாடு உற்பத்திற்காக நடவடிக்கைகள் ஏதும்

எடுத்திருப்பதற்காக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மூலதனச் சொத்துக்கள் புனர்நிர்மானம் மற்றும் அபிவிருத்தி செய்தல் செலவு விடயத்தின் கீழ் உத்தியோகபூர்வ வாசஸ்தல திருத்தவேலைகளுக்காக ரூபா 12.50 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அச் செலவுகள் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீன் சுப் கட்டிகள் ஒன்று உற்பத்தி செய்வதற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற்றுக்கொள்வதற்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனமொன்றிற்கு நிருவனத்திற்கு ரூபா 392,500 செலுத்தியிருந்த போதிலும் 2017 ஆகஸ்ட் வரை அவ்வாறான உற்பத்தியொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடல் தொழில் அமைச்சின் அனைத்து அலுவல்களையும் கணனிமயப்படுத்தல் மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் செயலாற்றுகையினை அளவீடு செய்வதற்கு மற்றும் பரிசோதனை செய்வதற்கு இயலுமான விதமாக இணையத்தள கணனி முறைமையொன்றினை நிறுவுவதற்காக ரூபா 5.65 மில்லியன் தொகைக்காக பெறுகைகள் வழிகாட்டல் கோவைக்குப் புறம்பாக தெரிவு செய்யப்பட்டிருந்த நிறுவனமொன்றுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வழிமுறையினை திட்டமிடுவதற்காக 2012 ஆண்டின் போது ரூபா 3.65 மில்லியன் தொகை மற்றும் 2014 ஆண்டின் போது ரூபா 8 மில்லியன் ஆக ரூபா 11.65 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2017 ஆண்டு வரை அவ்வாறான கணனி முறைமையொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

(எ) ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு வழங்கியிருந்த ஏற்பாடுகளிலிருந்து மஹகல்வெவ பிரதேசத்தில் கடற்தொழிலாளர் ஒய்வு நிலையத்தின் தரைகரு சீமெந்து போடுவதற்காக ரூபா 80,556 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ் விடயத்தை உரிய முறையில் நிறைவேற்றியிருக்கவில்லை என பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஏ) குளமொன்றுடனான ஊர் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,489,888 இற்கான ஏற்பாடுகளின் கீழ் பெந்தி வெல பிரதேசத்தில் ரூபா 1,489,888 தொகை செலவிடப்பட்டு கடற்தொழில் சனசமூக நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது செயற்திட்டத்தின் குறிக்கோள் கடற்தொழிலாளர் சமுதாயத்தை மேம்படுத்தல் ஆக இருந்த போதிலும் அப்பிரதேசம் கடற்தொழிலாளர் குடும்பங்கள் வதியும் பிரதேசமொன்றல்ல என வெளிப்படுத்தப்பட்டது. அதேபோல் தரைக்கு சீமெந்து போடுவதற்காக ரூபா 147,960 தொகையொன்று விவசாய அமைப்பொன்றிற்கு செலுத்தியிருந்த போதிலும் தரைப்பகுதி வெடிப்படைந்து இருந்ததுடன் தரையரையின் நிர்மாண வேலை உரிய நியமத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது.

(ஐ) கடற்தொழில் அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் தங்காலை மற்றும் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட மூன்று பாதை அபிவிருத்தி செயற்திட்டங்கள் மூன்றின் நிர்மாண வேலைகளை உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என பௌதீக பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறு நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 2.16 மில்லியன் தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஒ) லுனுகம்வெஹர பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப அலுவலர் ஒருவரினால் தயாரிக்கபட்ட ரூபா 744,032 இற்கான மதிப்பீட்டின் மீது லுனுகம்வெஹர நீர்தேக்கத்தில் 100 மீன்பிடி படகுகள் நிறுத்தி வைக்கக்கூடிய விதமாக இறங்குதுறையொன்று நிர்மாணிப்பதற்கு விவசாய அமைப்பொன்றிற்கு ரூபா 717,440 தொகையொன்றிற்கு 2016 அக்தோபர் 23 திகதி சாட்டப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 21 திகதி வரை அந்த விவசாய அமைப்புக்கு ரூபா 706,499

தொகை செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) மேற்கூறிய நிர்மாண வேலைக்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 706,499 தொகைசெலுத்தியிருந்த போதிலும் அந்த இறங்குதுறையில் படகுகள் நிறுத்த முடியாதென குறிப்பிட்ட கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவரினால் கணக்காய்விற்கு அறிவித்திருந்தது.

(ii) இறங்குதுறையின் நிர்மாண வேலைகளுக்காக பயன்படுத்தபபட்ட மண்ணின் அளவினை கணித்திருக்காததுடன் 2017 ஆகஸ்ட் 04 திகதி தொழில்நுட்ப அலுவலருடன் இறங்குதுறைக்கு போடப்பட்டிருந்த மண்ணின் அளவைகளைப் பெற்றபோது போடப்பட்டிருந்த மண்ணில் அளவு 716.63 தொகை மீற்றர் கியூப்களாகுமென வெளிப்படுத்தப்பட்டது. எனினும், 2,696.56 மீற்றர் கியூப் களிமண்ணுக்கான ரூபா 706,499 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 518,742 தொகை மிகையாக செலுத்தியிருந்ததென வெளிப்படுத்தப்பட்டது.

(iii) இறங்குதுறைக்கு புற்கரண் பிடித்தலுக்காக 1,456 சதுர மீற்றர்களுக்காக ரூபா 267,904 தொகை செலுத்தியிருந்த போதிலும் உண்மையாகவே காணப்பட்ட அளவு 1040 சதுர மீற்றர் மாத்திரம் என வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 76,544 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(iv) இந்த நிர்மாண வேலை நீர்த்தேக்கத்தின் உட்பகுதியில் சரளை கற்பாதைக்கு சமமாக காணப்பட்டதுடன் இறங்குதுறையொன்றில் பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படவில்லை எனவும் நீர்தேக்கத்தில் நீர் முற்றாக நிறைந்த போது மண் போட்டு தயாரிக்கப்பட்ட இந்த இறங்குதுறை அரித்துச் செல்வதற்கு இடமுள்ளது எனவும் வெளிப்படுத்தப்பட்டது. இந்த நிலைமை மீனவர் சங்க தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டது.

(ஓ) ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு வழங்கியிருந்த ஏற்பாடுகளின் கீழ் 2016 திசெம்பர் மாதத்தில் ரூபா 501,623 தொகை செலவிடப்பட்டு மீன்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யும் கூடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதலும் 2017 ஆகஸ்ட் வரையும் எதுவித தேவைக்குப் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஔ) மீன் பிடித்துறைமுக நங்கூரத் தளங்கள், தோனித்துறை அபிவிருத்தி மற்றும் புனரமைக்கும் செயற்திட்டம்

(i) கலமெட்டிய மீன்பிடித்துறைமுக நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2014 ஜுன் 09 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 899.53 மில்லியன் தொகை(பெறுமதி கூட்டிய வரி) ஆகும். 2016 ஜுன் 8 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்ய வேண்டியிருந்த மேற்கூறிய செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 திகதி வரை பௌதீக முன்னேற்றம் 70 சதவீதமாகும். அது வரை மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு 660.25 மில்லியன் தொகை என வெளிப்படுத்தப்பட்டது.

(ii) காலி மீன்பிடித்துறைமுக புதிய இறங்குதுறை நிர்மாணிப்பதற்காக மண் ஆய்வு விடயங்கள் 2014 நவம்பர் 03 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2016 நவம்பர் 8 திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தாமதம் 02 வருடங்களாகும் 2017 ஜுலை 04 திகதி வேலை பூர்த்தி செய்ய வேண்டியிருந்த இந்த செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 2017 ஜுன் 30 வரை 15 சதவீதமாகும் என வெளிப்படுத்தப்பட்டது.

(iii) கய்காவல நங்கூரத்துறை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்க முன்னர் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்காமையால் 2014 செப்டம்பர் 15 திகதி வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் 2014 அக்தோபர் 23 திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்தது. அது வரை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த. வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் ரூபா 55 மில்லியன் தொகை, பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 25.28 தொகை மற்றும் மதியுறை கட்டணம் ரூபா 3.12 மில்லியன் ஆக கூட்டுத்தொகை ரூபா 83.40 மில்லியன் தொகையான செலவுகள் பயனற்ற செலவு ஒன்றென அவதானிக்கப்பட்டது.

(iv) ரூபா 28 மில்லியன் தொகைக்கான பலஹத்துறை அலை தாங்கியை நீடிக்கும் செயற்திட்டத்தின் வேலைகள் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் முற்பணமாக ரூபா 19,984,669 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மொத்த செலவு ரூபா 16,982,928 ஆக இருந்தது. மீதித் தொகை ஆகிய ரூபா 3,001,741 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) பேருதொட்ட அலைதாங்கியினால் நீடிவரும் விடயம் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதி செயலாற்றுகை அறிக்கையில் அதனது முன்னேற்றம் தொடர்பாக குறிப்பிடப் பட்டிருக்கவில்லை.

(vi) குடா வெல்ல மீன் பிடித் துறைமுக புதிய இறங்குதுறை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ரூபா 142 மில்லியன் கிரயத்தை கொண்டிருந்ததுடன் 2016 அக்தோபர் 13 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 ஏப்ரல் 29 திகதி வேலை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2017 ஜூன் 30 திகதி வரையான பௌதீக முன்னேற்றம் 54 சதவீதம் என வெளிப்படுத்தப்பட்டது.

(vii) ஹம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்தின் அலைதாங்கியை நீடிப்பதற்கான 2015 இல் ரூபா 200 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் துறைமுக வளவில் மணல் அகற்றும் விடயம் இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தினால் 2016 மார்ச் 20 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் 2016 செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அலைதாங்கி 150 மீற்றர்களினால் நீடிப்பதற்கான விடயத்திற்காக ரூபா 30 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஜூன் அளவில் குறிப்பிட்ட விடயம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) 2015 ஆண்டின் போது ஆரம்பிப்பதற்காக திட்டமிட்டிருந்த பரலிய நங்கூரத் தளம் நிர்மாணிக்கும் செயற்திட்டம், சிலாபம் மீன்பிடித் துறைமுகத்தின் கடல்ஏரி வாங்கதவு நிர்மாணித்தல் மற்றும் தொடந்துவ மீன்பிடி துறைமுகத்தை நிர்மாணித்தல் ஆகிய செயற்திட்டங்கள் 2017 ஆண்டு வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) 2016 மே 14 திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட காரைநகர் வள்ளத் தளம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2017 அக்தோபர் 16 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது எனினும் 2016 திசெம்பர் 31 திகதி அளவில் நிதி முன்னேற்றம் 1.7 தொகையாக இருந்ததுடன் 2017 இன் மூன்று காலாண்டு வரையும் எதுவித பௌதீக முன்னேற்றமும் காணப்படவில்லை.

(x) 2016 செப்டம்பர் 9 திகதி வேலைகளை பூர்த்தி செய்யப்பட்டிருந்த வெண்னப்புவ மீன்பிடித் துறைமுக நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2017 பெப்ரவரி 15 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 இரண்டாவது காலாண்டிலும் எதுவித முன்னேற்றமும் அறிவித்திருக்கவில்லை.

(xi) இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் வழங்கியிருந்த கணிய சிட்டையை அடிப்படையாகக் கொண்டு நீர்கொழும்பு கடலேறி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 2014 திசெம்பர் 14 திகதி ரூபா 5 மில்லியன் செலுத்தியிருந்த போதிலும் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக ஆவணங்கள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டிருப்பதனால் கணக்காய்விற்கு சமர்பிக்க முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.12 வங்கிக் கணக்குகள் பேணுவதில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) சுனாமிக்கு பின்னரான புனர்நிர்மாண மற்றும் மூலவள முகாமைத்துவ செயற்திட்டம் தொடர்பாக மேற்கூறிய வங்கிக் கணக்குகளின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலத்தை மிகைத்திருந்த ரூபா 16,735 தொகைக்கான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமானங்கள் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், காசோலைகளின் விபரங்களும் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**3.13 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுள்ளவையாக இருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மூலதன சொத்துக்கள் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செய்தல், கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் மற்றும் திருத்த வேலைகளுக்காக 2016 ஆண்டின் போது செலவுகள் செய்யப்பட்டிருந்த ரூபா 12.50 மில்லியன் தொகை செலவு தொடர்பாக விலைகூறல் அழைப்புப் பதிவேடு, பெறுகைகள் சபை தீர்மாணங்கள், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள வழங்குனர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் குறிப்பிட்ட செலவுகள் செய்யப்பட்ட விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தை மீள்கட்டியமைப்பதற்காக தேவையான மதியுரை சார் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 2.64 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 செப்டம்பர் 18 திகதிய அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை ஒன்றின் பிரகாரம் குறிப்பிட்டு இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்தை மீள் கட்டமைப்பதற்குத் தேவையான தொழில்நுட்பம் அறிவினை பெற்றுக் கொள்வதற்காக மதியுரைசார் கம்பனி ஒன்றின் உதவியை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும், மேற்கூறிய அமைச்சரவை பத்திரத்தினால் அவ்வாறான அங்கீகாரமொன்றினை வழங்கியிருக்கவில்லை.

(ii) மதியுரைசார் நிறுவனமொன்றினை தெரிவு செய்வதற்காக அமைச்சினால் 6 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்த்திருக்காததுடன் கிடைத்திருந்த விலைகூறல்கள் தொடர்பாக தகவல்களும் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. கூறுவிலைகளின் பிரகாரம் 2 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் சமர்பிக்கபட்டதாக அறிவித்திருந்த போதிலும் அவ் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(iii) 2015 பெப்ரவரி 10 திகதி கூடிய பெறுககைக் குழு, குறைந்த விலையாக சமர்பிக்கப்பட்டிருந்த ரூபா 2.80 மில்லியன் விலையினை இரத்து செய்வதற்கான காரணத்தை விளக்காமல் ரூபா 3.90 மில்லியன் விலையினை சமர்பித்திருந்த நிறுவனத்துடன் கலந்துரவாடி ரூபா 3.12 மில்லியன் பெறுமதிக்கு குறிப்பிட்ட விடயம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(iv) மேற்கூறிய பெறுமதிக்கு மதியுரைசார் சேவைகள் வழங்குவதற்காக இணங்கியிருந்த வழங்குனருடன் எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) மதியுரைசார் கம்பனியினால் குறிப்பிட்ட விடயத்தை உரிய முறைப்படி நிறைவேற்றியிருக்கவில்லை என 2016 நவம்பர் 18 திகதி நடைபெற்ற இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மாணிக்கப்பட்டிருந்தது. மதியுரைசார் அறிக்கையினை மீளாய்வு செய்த அமைச்சின் பெறுகைகள் குழுவினால் குறிப்பிட்ட அறிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடிய மட்டத்திலான அறிக்கை ஒன்றல்ல என தீர்மானித்திருந்ததது.

(vi) மேற்கூறிய தீர்மானத்தின் பிரகாரம் வழங்குனருக்கு சார் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தில் இருந்து ரூபா 1.03 மில்லயன் தொகையினை கழித்து கொடுப்பனவு செய்வதற்காக விதந்துரைதிருந்த போதிலும் ரூபா 320,385 தொகை வழங்குனருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(vii) 2016 பெப்ரவரி 02 ஆம் திகதிய MF/PT/CM/2016/08 ஆம் இலக்க நிதி அமைச்சரின் கடிதத்தின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திறைசேரியினால் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தை மீள்கட்டமைப்பதற்காக வழங்கியிருந்த ரூபா 689 மில்லியன் தொகையினை முறைசார் விதமாக பயன்படுத்தி அதனது முன்னேற்றத்தை மாதாந்தம் திறைசேரிக்கு அறிவிக்கும்படி ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(viii) 2016 ஆண்டின் போது குறைநிரப்பு ஏற்பாடுகள் என திறைசேரியிலிருந்து ரூபா 890.19 மில்லியனிற்கான மற்றும் நிதிப்பிரமாணங்கள் 66 மாற்றங்களின் கீழ் ரூபா 3.10 மில்லியன் தொகை ஆக ரூபா 893.29 மில்லியன் தொகை மீன்பிடிக் கூட்டுத்தாபத்தை மீள்கட்டமைப்பதற்காக அமைச்சுக்கு வழங்கியிருந்த போதிலும் அதனது முன்னேற்றம் தொடர்பாக அறிவித்திருக்கவில்லை.

**3.14 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 20 திகதி வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகி இருந்த போதிலும் கடந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் மற்றும் சேதங்கள்

கணித்தல் ஒன்று நடைபெற்றிருக்கவில்லை. 2016 ஆகஸ்ட் 09 திகதி அமைச்சு செயலாளரின் பதிலின் பிரகாரம் நிதிப்பிரமாணம் 104 இன் கீழ் விசாரணை மேற்கொள்வதற்கு குறிப்பிட்டிருந்த போதிலும் 2016 ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நட்டங்கள் மற்றும் சேதங்களின் கீழ் அந்த விபத்து தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 திசெம்பர் 26 திகதி வாகனம் ஒன்றிற்கு ஏற்பட்டிருந்த விபத்தின் நட்டம் ரூபா 939,173 நட்டம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி அமைச்சு செயலாளரின் பதிலின் பிரகாரம் போக்குவரத்துப் பிரிவில் விபத்து தொடர்பான அறிக்கை மற்றும் கோவை என்பன காணப்படவில்லை என அறிவித்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் டீஜிஎஸ்ஏ 7, டீஜிஎஸ்ஏ 7(i) படிவங்களில் இந்த விபத்து தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆகஸ்ட் 11 திகதி வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானமையால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 512,080 தொகையினை 2017 மே 09 திகதி வரை அறவீடு செய்திருக்காததுடன் அதனை ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் மற்றும் விடுபாடுகள் தொடர்பான கூற்றில் (டீஜிஎஸ்ஏ 7) மற்றும் பேரேடுகளில் இருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் (டீஜிஎஸ்ஏ 7(i) குறிப்பிட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஜனவரி முதல் ஜூலை 31 வரை அமைச்சின் 10 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த ரூபா 6.64 மில்லியனுக்கான சேதங்கள் தொடர்பாக விபரங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் மற்றும் விடுபாடுகள் தொடர்பான கூற்றில் (டீஜிஎஸ்ஏ 7) குறிப்பிட்டிருக்காததுடன் 2016 ஆகஸ்ட் முதல் திசெம்பர் 31 திகதி வரை ஏற்பட்டிருந்த 4 வாகன விபத்துக்களின் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை.

## 3.15 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 17 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 116 | 77 | 39 |
| (iv) | ஆரம்ப நிலை | 54 | 47 | 07 |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 04 | 02 | 02 |
| | **மொத்தம்** | **200** | **147** | **53** |

(ஆ) 2010 மே 14 திகதிய சீஏ/1/17/1 இலக்க ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 2.1 பந்தியின் பிரகாரம் அமைச்சர்களின் மற்றும் பிரதி அமைச்சர்களின் அலுவலகங்களில் கடமையாற்றும் உதவி பதவியணியினர் உச்ச எல்லை 15 எனினும் கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அபிவிருத்தி அமைச்சரின்

பதவியணி என 2016 ஆண்டின் போது 21 பேர் இணைக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் பதவியணியினர் 06 பேர் மிகையாக இணைக்கப்பட்டுள்ளனர்.

(இ) அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை நிருவாகச் சேவை அல்லாத தற்காலிக பதவியொன்றிற்காக பொதுநிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இன் எஸ்எல் - 2006 சம்பள அளவு செலுத்துவதற்காக உதவிச் செயலாளர் ஒருவர் (தொழிலாளர் தொடர்பு) நியமனம் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடற்தொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் தொழிலாளர் தொடர்பு பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறிய உத்தியோகத்தருக்கு 2016 மே 30 திகதி முதல் நவம்பர் வரை ரூபா 411,892 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கடமை சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) குறிப்பிட்ட பதவி அரச கரும வாகனம் ஒன்றிற்கு உரித்தில்லாத போதிலும் அமைச்சுக்கு சொந்தமான வாகனமொன்று உத்தியோகத்தருக்கு போக்குவரத்து விடயங்களுக்காக இணைக்கப்பட்டிருந்தது.

(iv) 2016 ஏப்ரல் 13 திகதி முதல் 2016 நவம்பர் 30 திகதி வரை மேற்கூறிய வாகனம் 14,636 கிலோ மீற்றர்கள் ஓடியிருந்ததுடன் 2016 ஏப்ரல் 13 திகதி முதல் ஜூலை 30 வரையான காலத்திற்காக எரிபொருள் செலவு என ரூபா 118,291 தொகை செலுத்தப்பட்டிருந்தது.